# பாதுகாவலன்

PATHUKAVALAN

தொடர்பு கொள்ள
பாதுகாவலன்
புனித வளன்
கத்தோலிக்க அச்சகம்
த. பெ. எண் 2
யாழ்ப்பாணம்

PATHUKAVALAN
St. Joseph's Catholic Press
P. O. Box 2
JAFFNA

மலர் 112 இதழ் 40 31-10-1986 பிரதி ரூபா 1-00 112 ஆண்டுகள் பழைமைவாய்ந்த ஒரேதமிழ் கத்தோலிக்க வார ஏடு


Chandikuli Branch Library

## கிறிஸ்தவ தலைவர்கள் இந்தியப் பிரதமரைச் சந்தித்தனர்

கிறிஸ்தவ தலைவர்களின் குழு ஒன்று ஆயர் லயனுஸ் கோமஸ் தலைமையில் செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதி கல்கத்தா ராஜ்பவனில் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்தது. 400 பேர் பிரதமரைக் காணக் காத்திருந்த வேளையிலும் பிரதமர் அமைதியாக இருந்து அவதானமாகத் தாம் கூறியவற்றைக் கேட்டார் என்ற மனநிறைவோடு குழு ராஜ்பவனை விட்டு வெளி வந்தது.

வெளிநாட்டுப் போதகர்களை நாடு கடத்தும் காரணம் பொதுவாக அறிவிக்கப்படினும் ஆயர்களுக்கும் மதத் தலைவர்களுக்கும் மட்டும் என்றாலும் நம்பிக்கையின் அடிப்படையில் அறிவிக்கப்பட வேண்டும், நாட்டின் சட்டத்தில் உள்ளது போன்று கிறிஸ்தவர்கள் அனைவரும் தேச ஒருமைப் பாட்டிற்கும் ஜனநாயகத்தின் உயர்ந்த நோக்கங்களுக்கும் உழைப்பவர்கள் என்று தமது சந்திப்பின்போது வற்புறுத்திக் கூறினார்கள்.

ஏழை எளியவர்களின் நல்வாழ்விற்காக உழைப்பது தவறான காரியமா என்று கேட்கப்பட்டபோது பிரதமர் ஏழை எளியவர்கள், வசதி அற்றவர்களுக்கான பணியில் தொடர்ந்தும் ஈடுபடும்படி கூறினார்.

கல்விப்பணியில் கிறிஸ்தவ செயற்பாடுகள் 1974ஆம் ஆண்டில் இருந்து உற்சாகப் படுத்தப்படவில்லைஎனக் குற்றம் சாட்டப்பட்டபோது தாம் கல்வி அலுவலகத்துடன் இது பற்றித் தொடர்பு கொள்வதாக உறுதி அளித்தார்.

ஈஸ்ரர், கிறிஸ்மஸ் போன்ற முக்கிய கிறிஸ்த விழாக்களில் வானொலி, தொலைக்காட்சி தொடர்புச் சாதனங்களில் முக்கிய இடம் கொடுக்கப்படுவதில்லை என்று கேட்கப்பட்ட போது அவற்றிற்கு முக்கிய இடம் கட்டாயம் கொடுக்கப்பட வேண்டும் என்றார்.

## உலகிற்கு இளைஞர்களின் அன்பு தேவை

**அன்னை திரேசா**

“தூய்மைத் தன்மை மிகவும் தேவையான உலகிற்கு இளம் உள்ளங்கள் அன்பையும் மகிழ்ச்சியையும் பரப்ப வேண்டும்”. இவ்வாறு அன்னை திரேசா கல்கத்தாவில் 700 இளைஞர்களுக்கு உரையாற்றும்போது கூறினார்.

“கடவுளின் அளப்பரிய அன்பை உணர்ந்து கொள்ளுங்கள்; உணர்ந்தவுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். இது போன்ற அன்பு குடும்பத்தில் தான் முதல் உருவாக முடியும்” 1979ஆம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பெற்ற அன்னை தொடர்ந்து தன் உரையில் “நாம் ஒருவர் ஒருவருக்காகச் செபிப்போம். நீங்களும் நானும் பரிசுத்த தனத்திலும் அன்பிலும் வளர வேண்டுமென்று செபிப்போம். அன்பையும் சமாதானத்தையும் எப்போதும் பரப்புவோம்”

“எத்தனையோ தேடப்படாதவர்களும், அன்பு செய்யப் படாதவர்களும் இந்த உலகில் இருக்கும்வேளையில் உங்களுக்கு உங்கள் குடும்பம் உண்டு. நீங்கள் உங்கள் குடும்பத்தில் செபிப்பதையும் அன்பு செய்வதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.”

நியூயோக் நகரில் இருக்கும் தனது சபையின் இல்லத்தில் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட 25 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவன் இறந்து கொண்டிருப்பதாகக் கூறிய அன்னை, “அவன் தனது துன்பங்களை எல்லாம் யேசுவின் துன்பங்களோடு இணைத்திருந்தான். நான் திரும்பிப்போகும் போது அவன் இறந்து விடுவான்” என்று கூறினார்.

நீங்கள் தந்தையர்களாகவும், தாய்மாராகவும் வாழ அழைக்கப்படும்போது உங்கள் குடும்பத்தை இறைவனுக்கு அழகானதாக்குங்கள்.

## பிறமதத்தினருடன் உரையாடல் வேற்றுமைகளை மறப்பதற்கன்று

“இரண்டாம் வத்திக்கான் சங்கம் பிறமதத்தினருடன் திருச்சபை உரையாடல்களை மேற்கொள்ள வேண்டும் என்றது இது எமக்கிடையேயுள்ள வேற்றுமைகளை மறப்பதற்கன்று. மாறாக நாங்கள் அடிப்படைக் கொள்கைகளில் வேறுபட்டவர்களாக இருப்பதால் எமக்கிடையே ஒருவரை ஒருவர் மதித்து ஏற்றுக்கொள்ளுகின்ற பண்பு வளர்வதற்கே” இவ்வாறு திருத்தந்தை இத்தாலியிலுள்ள இந்திய மக்களின் பிரதிநிதிகள் தம்மைச் சந்தித்தபோது ஆற்றிய உரையிற் கூறினார்.

## அன்னை திரேசாள் பற்றி

**ஈழநாடு நமது நோக்கு**

பாலைவனத்திற் பிணவாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் எலும்புக்கூடுகள் மலிந்த இன்றைய உலகுக்கு ஆண்டவன் அளித்த வரம் அன்னை திரேசா.

விமானப் பயணத்தில் விபத்துக்குள்ளாகித் தெய்வாதீனமாக காயங்களின்றி உயிர்தப்பிய அன்னை தாய்மைக்கு விஜய தசமி அன்று விசேட கருத்தை உலகுக்கு வழங்கியிருக்கிறார்,

‘அன்னை திரேசா’ ஆத்மீகத்தின் இக்காலப் புதுப்பதிப்பென்று நாத்திக நேரு குறிப்பிட்டிருந்தார். மகாத்மாவிற் குடிகொண்டிருந்த மர்மசக்தியை அளவிடமுடியாத நேரு அன்னையின் அற்புதங்களில் உள்ளத்தைப் பறிகொடுத்தது எதனை விளக்குகின்றது.

புலன் அடங்கப்பெற்ற துறவியினது ஆற்றலுக்கு அகன்ற விண்ணுலகை ஆளும் தேவர்க்கரசனான இந்திரன் வலியிழந்து வருந்திய சான்றே போதுமானதென்கிறார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

இன்று உலகியலில் உயர் பதவியடைந்து வாழும் அரசர்களும் ஜனாதிபதிகளும், பிரதமர்களும் தத்தம் நாட்டைப் பரிபாலிப்பதில் பல தோல்விகள் கண்டு செயலிழந்திருக்கின்றனர். அருள்ஒழுக்கம் எங்கும் குன்றியிருக்கும்காலம் இது.

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

## தேவ அழைத்தல் பெருகப் பேட்டி

கடந்த மாதம் 8ஆம் திகதி முல்லைத்தீவு வண்ணான்குளப் பங்கிலே முப்பெரும் விழா கொண்டாடப்பட்டது. இஃது ஓர் அன்னை வேளாங்கண்ணித் திருத்தலமாக விருப்பதால், காக்கும் அன்னையின் திருத்தல விழா, யாழ் மறைவட்ட நூற்றாண்டு விழா, அன்னை மரியின் பிறப்பின் ஈராயிரம் ஆண்டின் நிறைவுவிழா ஆகிய மூன்றையும் சேர்த்து முப்பெரும் விழாவாகப் பங்குமக்கள் கொண்டாடினார்கள்.

5ஆம் திகதி முல்லைநகர் மரியன்னை ஆலயத்தில் மாலைத் திருப்பலியின் பின் செபமாலைப் பேரணி ஒன்று, பங்குமக்கள் திருச்சிலுவை ஏந்தியவர்களாக கடற்கரை வீதி வழியாக அன்னை வேளாங்கண்ணித் திருத்தலத்தை அடைந்தனர். அதன்பின் கொடியேற்றப்பட்டது. அடுத்தநாள் 6ஆம் திகதி தேவ அழைத்தல் தினமாக கொண்டாடப்பட்டது. முல்லை நகரிலே அழைத்தல்கள் குறைந்து கொண்டு போவதை முன்னிட்டே அன்று அருட்சகோதரன் ம. பெ. ஞானரத்தினம், அருட் செல்விகள் சென்போல், சிசிலியா, எமிலி ஆகியோரையும் அருட் சகோதரன் யோ. அன்ரனி, அருள்திரு எட்மன் மைக்கல்(அ.ம.தி.) ஆகியோரையும் பேட்டி கண்டார். இப்பேட்டி இங்குள்ள மக்களைத் திசை திருப்பியது என்றே கூறவேண்டும்.

முப்பெரும் விழா இனிதே 8ஆம் திகதி திருப்பலியுடன் முடிவுற்றது. இதைப் பங்குத் தந்தை அருள்திரு எட்மன் மைக்கல் நிறைவேற்றி வைத்தார்.

லூர்து
வண்ணான்குளம்

## நீல ஊர்வலம்

மரியன்னையின் பிறப்பின் ஈராயிரம் ஆண்டு நிறைவை முன்னிட்டு அன்னையை மகிமைப்படுத்துவதற்காக யுவதிகள் அனைவரும் நீலநிறச்சேலைகளை அணிந்து செபமாலை ஊர்வலத்தை நடத்திய காட்சி மாதாவைப் போன்று அனைவரும் நீல வெள்ளத்தில் மூழ்கிய காட்சியாக அமைந்தது. இளவாலை, புனித யாகப்பர் ஆலய மரியாயின் சேனையினரால் நடாத்தப்பட்ட இந்தச் செபமாலை ஊர்வலத்தை இம்மாதம் 4ஆம் திகதி மாலை 4.30 மணிக்குப் பங்குத்தந்தை அருள்திரு எம். ரீ. பற்றிக் திருப்பலி ஒப்புக்கொடுத்து ஆரம்பித்துவைக்க, பக்தர்களும் ஏராளமான பங்குமக்களும் பங்கைச் சுற்றிவலம் வந்து மாதாவின் ஆசீரைப்பெற்றனர்.

தகவல்: ம. மேரிமலர்

# மீட்புப் பணியில் வியாகுல அன்னை

மனுக்குலத்தை மீட்டெடுக்கும் இறைத்திட்டத்தில் மரியன்னை தனது கரத்திலும் மடியிலும் யேசுபாலனை ஏந்தினுள். முப்பது வயதுவரை திருக்குடும்பத்தில் அவரைக் கண்மணிபோற் காத்து ஞானத்திலும் அறிவிலும் வளர்த்து வந்தாள்.

இரட்சணிய அலுவலை மேற்கொள்ளச் சம்மதித்துப் பிரிந்துசெல்ல விட்டாள். கடைசியில் பாடுபடக் காலம் வந்ததும் கிறிஸ்துவைப் பின்தொடர்ந்து அவருடைய வாதைகள், பாடுகள், அவமானங்கள், நிந்தைகள் எல்லாவற்றையும் தானும் கண்கண்ட சாட்சியாக நின்று சிலுவைப் பாதையில் அவரின் பின்னே தொடர்ந்து கல்வாரியில் ஆணிகளில் தொங்கிய போதும், அவருடன் அவரடியில் இரட்சணியத்துக்காக இறைவனை யேசுவோடு ஒன்றுசேர்ந்து மன்ருடினுள்.

ஈற்றில், அவருடைய திருவுடலைத் தன் கரங்களிலும் மடியிலுமாகத் தாங்கி வியாகுல அன்னையாகத் தன்னை ஆண்டவருக்கு நித்திய காணிக்கையாக்கினுள். இந்த உலகம் என்றுமே கண்டிராத பரிசுத்த தியாகப்பலியைத் துலாம்பரமாக்கும் உயிரே வியத்தை சித்திர விற்பன்னர் மைக்கல் அஞ்செலோ வரைந்துள்ளதுடன் இன்றும் சம்பேதுரு வானவரின் மகா ஆலயத்தில் காணக்கிடைப்பது எங்கள் பாக்கியமே. 1820ஆம் ஆண்டு கொழும்புச் செட்டிகுலத்தவர் கட்டியெழுப்பியுள்ள, புதிய செட்டித் தெருவில் காட்சி தந்துகொண்டிருக்கும் வியாகுலமாதா ஆலயத்தில் அதே பிரதிமையை யாவரும் கண்டு வியாகுலத்தாயாரைப் பத்தி வைராக்கியத்துடன் மன்ருடுகின்றனர்.

வித்துவான்
அ. சந்தியாப்பிள்ளை

வாழ்வுதரும் இறைவாக்கு வாழ்வுதரும்

*ஆண்டவருடைய பெயரை உச்சரிப்பவன் எவனும் அநீதியினின்று விலகி நிற்பானுக*

2 தீமோ. 2: 19

இறைவாக்கு வாழ்வுதரும் இறைவாக்கு

# அறிவுச்சுடர்

நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் எதிர்ச்செயலாக நம்மிடம் திரும்பிவரும். நாம் ஒரு தீமை செய்தால் அதற்காக நாம் துன்பத்தை அநுபவித்தேயாகவேண்டும். அதை அழிப்பதற்கோ அதை மாற்றுவதற்கோ அண்டசராசரங்களில் உள்ள எதற்குமே ஆற்றல் கிடையாது. அதுபோலவே, நாம் ஒரு நல்ல காரியம் செய்கிருேமென்ருல், அதன் பயனை நாம் அனுபவிப்பதிலிருந்து தடுக்கவோ, அழிக்கவோ எதற்கும் வலிமையில்லை.

தருமமாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும், கருணையோடு நினைக்கின்ற ஒவ்வொரு நினைப்பும், நம்மை நாம் பெரிதாக எண்ணும் மனநிலையை மாற்றுகின்றது, நம்மை மிகத் தாழ்ந்தவர்களாகவும், சாதாரணமானவர்களாகவும் எண்ணச்செய்கின்றது. 'நான்' என்பதை அழிப்பதே எல்லா ஒழுக்கங்களுக்கும் அடிப்படையாகும்.

உலகில் நாம் பலவகையான மனிதர்களைக் காண்கிருேம். தங்கள் உயிரைக் கொடுத்தும் கூடப் பிறருக்கு நன்மை செய்வார்கள் சிலர். இவர்கள் கடவுள் மனிதர்கள். இத்தகையோர் நூற்றுவர் இருந்தாலும் அவர்கள் உள்ள நாடு, எதற்கும் எந்தக் காலத்துக்கும் கவலைப்படவேண்டியதேயில்லை. அடுத்திருப்பவர்கள் தங்களுக்குத் துன்பம் நேராத வரையில் தாங்களும் பிறருக்குத் துன்பம் செய்யாமல் இருக்கும் நல்ல மனிதர்கள். மூன்ருவது வகையினர், தங்களுக்கு மட்டும் நன்மை செய்து கொள்ளுவார்கள். எப்போதும் பிறருக்குத் தீமை செய்வார்கள். எந்தப் பலன் கிட்டாவிட்டாலும், எப்போதும் பிறரைத் துன்புறுத்த வேண்டுமென்ற இயல்புடையவர்களும் இருக்கிருர்கள்.

எவனெருவன் பிறருக்காகத் தன்னை அழித்துக்கொள்ள, தியாகஞ்செய்யத் தயாராக இருக்கின்ருனே அவனுக்கு முன்பு, மனித சமுதாயம் முழுவதுமே கைகளைக் கட்டிக் கொண்டு பணிந்துநிற்கும்.

வாழ்க்கையின் இலட்சியம் அனுபவிப்பது என்பதில்லை. சுயநலத்தைக் கொல்லுவதுதான் வாழக்கையின் உண்மையான இலட்சியம். பிறருக்கு நாம் உதவினேமானுல். அது நம்மை நாம் தூய்மை செய்து கொள்வதற்கும், ஞானம் பெறுவதற்கும் இயற்கையால் அளிக்கப் படுகின்ற மிகப்பெரும் வாய்ப்பாகும். நாம் கற்றுக் கொள்ளவேண்டிய மிகப் பெரிய பாடமும் இதுவேதான் இதை முழுமையாக அறிந்து கொள்ளாதவரையில் எக்காலத்திலும் நாம் மகிழ்ச்சியாயிருக்கமாட்டோம்.

## சிந்தையினிக்குஞ் செல்வம்— 137

# புகழ் வாழ்வு

வாழ்க்கை என்பது ஓர் அபூர்வமான கலை. பருகவேண்டிய ஒரு நீரூற்று. கொழுந்துவிட்டுப் பிரகாசிக்க வேண்டிய கருப்பூரம். இணையற்ற இலட்சியத்தைக் குறிவைத்து ஏற வேண்டிய மலை. எல்லோர்க்கும் நன்மை செய்யச் சுழலவேண்டிய பம்பரம். ஒழுக்கத்தின் நெருப்பு. தியாகத்தின் வேள்வி.

எப்படியும் வாழ்ந்து விடலாமா? இல்லை. இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்க்கைக்கு உண்டு ஓர் எல்லை எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பது பெருமை தராது. எப்படி வாழ்ந்தோம் என்பதே வாழ்வின் வெற்றியும் சிறப்புமாகும்.

நீர்க்குமிழி போன்ற நிலையில்லாத இந்த உலகத்தில், நிலையான ஒரு புகழை நிறுத்துவதுதான் எமது வாழ்வின் தலையாய கடனுகும். நில்லாதவற்றை நிலைக்கு மென்றெண்ணி, இலவு காத்த கிளியாக ஏமாந்து போகும் வாழ்வு செல்லாக் காசு.

தன்னைக் கொடுத்துத் தன்னை நிறைக்கும் பொன்னுன தியாக வாழ்வே புகழ்பூத்த வாழ்வாகும்.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

வாழ்க்கைத் தத்துவத்தை, இலட்சியத்தை, தருமத்தின் நல்லியலை, சத்தியத்தை வகுத்துரைக்கும் சிந்தனைக் கருவூலமாசத் திகழ்கிவது இந்தக் கவிதைச் சித்திரம்.

கோடிமக்கள் பிறக்கின்ருர் இந்த மண்ணில்
கோடிமக்கள் இறக்கின்ருர் இந்த மண்ணில்
வேடிக்கை அவர்களிலே சிலபேர் மட்டும்
மேன்மை மிகு வரலாற்றில் தலைவரானுர்
தேடிவைக்கும் வயிரமணி தங்கமெல்லாம்
திகைப்பூட்டும் எழிலுடலம் எல்லாமிந்தக்
கூடுசென்று குழியடையும் வளரதான் சொன்னுல்
குவலயத்திற் புகழ் ஒன்றே எஞ்சி நிற்கும்.

# பூங்கொடி மாதவன்

(வளன்)

## 30. எகிப்து நாடு அடைந்தார்

உலகுக்கு இருகண் ஒத்தவராகிய பூங்கொடியோனும் மீன்முடியாளும் படர்வழிகடந்த பின்னர் நீர்முகத்திலே அரும் பொன்சிந்தும் நெடும்புனலொன்று கண்டார். வானவன் கபிரியேல் இதுதான் எகிப்து நாட்டின் இராசதானிக்கு அண்மையிலே பாயும் 'கையாறு' ஆகுமென்று கூறி அதன் பெருமைதனை விளக்கலானுன்.

யாக்கோபின் சந்ததியாராகிய யூதர் எகிப்திலே பலுகிப் பெருகுவதைக்கண்ட பார்வோன் அச்சந்ததியிலே பிறக்கும் ஆண்குழந்தைகளை ஆற்றில் எறிந்து கொன்று விடுமாறு கட்டளையிட்டான். அவ்வாறு நடந்து வருநாளில்,

காவினுள் கொடியின்பூவோ, கமலமேல் அன்னப் பார்ப்போ
பூவினுள் திரண்டதேனே, பொன்வலம் புரியுள் முத்தோ,
வாவியுள் கமலமொட்டோ, வானுலாம் கோளின் ஒன்ருே,
கூவினுள் தனிநீர்த் தன்று, அக்குலத்தில் ஓர் குழவி வேய்ந்தான்.
[கூ - உலகம்; தனிநீர்த்து - தனி அழகுடன்]

தனி அழகுடன் பிறந்த அந்தக் குழந்தையை அதன் தாய் ஆற்றில் எறியத்துணியாது, பேழை யொன்றில் வைத்து, ஆற்ருேரமாயுள்ள நாணற்புதரில் வைத்து விட்டுத் தொலைவில் ஒளித்திருந்தாள். அவ்வேளை ஆற்றிலே நீராடவந்த அரசிளங்குமரி அக்குழந்லதயைக் கண்டு அதன் அழகில் மயங்கி 'என்தோன்றல்' என உரிமை பாராட்டி அரண்மனையில் வைத்து வளர்த்து வந்தாள். பெற்ற தாயே பாலூட்டும் தாயாகவும் அமையவே அக்குழந்தை பல்வகைச் சீரோடும் வளர்ந்தது. ஈற்றில் அரண்மனையினின்றும் தப்பியோடித் தளர்ந்த தன் குலத்தை ஓம்பத் தற்பரன் பணியேற்று யூதருக்கு விடுதலை அளித்தவன் அம்மோயிசனே!

ஐயெடுத்து ஒளிர்அத்தோன்றற்கு "அன்பெடுத்து
உயிரைக்காக்க,
கையெடுத்து அளித்ததென்று, இக்கங்கையைக்
'கையாறு' என்னும்;
மெய்யெடுத்து இசைத்த நாமவிதியிதே'' என்ருர் வானேன்
மையெடுத்து இரைத்த யாறு வலத்தில் இட்டு அவரும் போனுர்.
[ஐயெடுத்து - அழகோடு; அளித்தது - காத்தது]

மோயிசனை அலையாகிய தன்கையினுலே ஏந்திய காரணத்தால் கையாறு எனப் பெயர் பூண்டது என்று வானவன் சொல்ல இருவரும் அதன் வலப்புறமாகச் சென்று ஒரு சுனைதனைக் கண்டு நீர் அருந்தி இளைப்பாறினர்.

அவ்வேளை, அன்னை மரியாள் தேவபாலனைப் போர்த்திய ஆடையொன்றை அச்சுனையிலே தோய்த்தாள்.

"தோய்ந்த தன்மையொடு அச்சுனை நன்னீர்
மேய்ந்த தன்மையொடு வெம்பிணி யாவும்
வாய்ந்த தன்மையொடு மாறவும், நாதன்
ஈய்ந்த தன்மையுளது, இன்றும் அது எஞ்சா

அதன் சிறப்பால் அச்சுனை நீரைப் பருகியவர் பல்வகை நோய்களும் தீரப்பெற்ருர். இன்றுவரை அதன் வரம் நீங்காமல் உளது. திக்கடங்கிலும் அருள் செய்யத் தேவகுமாரன் எகிப்திற்கு வந்தமையால் வானவர் பற்பல ஊர்களுக்குச் செல்லும் சுற்றுவழியைக் காட்ட யாவரும் ஞானநன்மைகள் பெற்றனர்.

அலகைகள் அஞ்சியோட, அவைகளுக்கிருப்பிடமாயிருந்த ஆலயங்களும் சிலைகளும் அழிந்தொழிந்தன, அதனைக் கண்ட யாவரும் அஞ்சி வியந்து நின்றனர்.

மின்முகம் புதைத்த கொண்மூ விரும்பிமேல் தவழ வானின்
நன்முகம் புதைத்த மீன்போல் நறைமுகத்து அலர்ந்த பைம்பூத்
தன்முகம் புதைத்த பாலால் தயங்கும்ஓர் மரமே, அங்கண்
பொன்முகம் புதைத்த வாயிற் புறத்து,
எழில் பொலிந்த தன்ருே.

விசும்பு தவழ உயர்ந்து வான்மீன்போல மதுப்பொழிந்து அலர்த்த பூக்களையுடைய ஒரு பெருமரம் வாயிலை அழகுசெய்து நின்றது. பெரிதாகவும் அழகாகவும் பெயர் அறியமுடியாதவாறு தனித்துவமாக நின்ற அம்மரத்தைச் சூழ்ந்து நின்று கொழும் புகை காட்டி 'தேவன்' என்று இறைஞ்சி நின்ருர்கள். அத்தருவிடைக் குடியாய் வைகிய அலகை வழமைபோலப் பாம்புருவாய்த் தோன்றிநின்று கேட்டவருக்கெல்லாம் விடைகூறி நின்றது.

பாலகனுய் வந்த பரமநாதனைக் கண்டதும், பாம்புருவாய் நின்ற பசாசு பாதாளம் சேர, அந்த மரம் மூவரையும் இறைஞ்சினுற்போல வளைந்து நிமிர்ந்தது. அந்த மரம் பெற்றவரத்தால் இன்றுவரை அதன் இலைகளைத் தின்பவர்கள் நோயகலப் பெறுகின்றனர்.

வான்மேல் ஞாயிறு நடப்பதே போல் ஊருராய் ஞான ஒளி வீசி அன்புவெள்ளம் மடைதிறந்து பாய, அவரவர்க்குதவித் தாயகம் விட்டு நீத்த ஐம்பதாம் நாள் நீலநதியால் ஊட்டம் பெறுவதும், முடிமன்னனின் உறைவிடமாய் விளங்குவதுமாகிய இராசமாபுரத்தை வந்தடைந்து ஒருசிறு குடிலில் ஒதுங்கினர்.

தான்வளர் கதிர் அழல் தாங்கி, நைதரு
கான் வளர் நிழல்கொடு எவரும் காத்தென
வான் வளர் வாழ்வினை வகுப்ப, நாதன்வந்து,
ஊன் வளர் பாசறை உவந்து நாடினுன்.

[நைதரு - வாடும்மரம்; ஊன் வளர்பாசறை - உடல்வழியாய் வரும்துன்பம்]

(வளரும்)

மக்கள் குரல்

## மூடநம்பிக்கை


பெயரளவில் மட்டும் கத்தோலிக்கராக வாழுகின்றவர்கள் பலர் மூடநம்பிக்கைகளைப் பின்பற்றிக் கிறிஸ்துவுக்குத் துரோகம் செய்கிருர்கள். இதற்கு முக்கியகாரணம் முழு விசுவாசமின்மையும், அறிவீனமும், சுயநலமும், வழிகாட்டிகளின் அசமந்தப் போக்குமே யாகும். பல கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவில் அசையாத நம்பிக்கையும் அன்பும் வைத்திருக்கிருர்கள். நம் கத்தோலிக்கருக்கிடையே இருக்கின்ற குருட்டுப் பக்திக்கு எதிராகப் பிரசாரம் செய்யவேண்டும். பங்குகளில் உள்ள பக்திச்சபைகள் கிராமங்களில் நடக்கும் மூடநம்பிக்கைச் செயல்களைத் திருத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும். மூடநம்பிக்கைகளை நாம் அறவே வெறுத்து, உத்தம கத்தோலிக்கராக மற்றையவர்களுக்கு முன்மாதிரியானவர்களாக வாழத் தெண்டிப்போம்.

யோ. அருள்

## வேதாகமக் குறுக்கெழுத்துப் போட்டி — 1

முடிவு தேதி 24-11-1986

பரிசு ரூபா 15/=




மேலிருந்து கீழ்:

1. இது விற்றவர்களை இயேசு கோயிலில் இருந்து விரட்டினுர்.
3. இயேசு முதற் சீடர்களைத் தெரிந்த இடம்.
4. ''—மறப்பவன் நட்பைத் தேடுகிருன்.
5. மார்த்தாள் மரியாளின் சகோதரன்.
7. கடவுள் 4ஆம் நாள் படைத்த ஒரு பொருள் மாறிக் கிடக்கிறது.

இடமிருந்து வலம்:

2. இது உள்ளவனே இயேசு குணப்படுத்திஞர்.
3. கடவுளின் அரசுக்கு உவமை கூறப்பட்டவிதை
6. அல்பேயுவின் மகன்.
8. ஆண்டவரின் சகோதரர் என அழைக்கப்படுபவர்.

விடையும், பரிசு பெறுபவரின் பெயரும், அடுத்த போட்டியும் 28-11-1986 இல் வெளிவரும். விடைகளைத் தபால் அட்டையில் தயாரித்து அனுப்புங்கள்.

## பாதுகாவலன் பெற

தபால் மூலம் பாதுகாவலன் தனிப்பிரதி பெறவிரும்புகிறவர்கள் நேரில் வந்து பணத்தைச் செலுத்திச் சந்தாதாரராகலாம். உங்கள் பங்குத்தந்தை மூலம் பணத்தைச் செலுத்தலாம். அல்லது காசுக்கட்டளை, தபால் கட்டளை, காசோலை மூலம் பணத்தை அனுப்பி சந்தாதாரராகலாம். ஓராண்டுக்குப் பத்திரிகையைப் பெறத் தபால் செலவு உட்பட சந்தா ரூ. 75/- மட்டுமே. பத்துப் பிரதிகளுக்குமேல் பெற்று வினியோகிப்பவர்களுக்குத் தபால் செலவு இல்லை. 10% தள்ளுபடி உண்டு. ஒரு பத்திரிகை ஒரு ரூபா மட்டுமே. நீங்கள் பணம் செலுத்தி அடுத்த வாரமே உங்கள் கையில் பத்திரிகை வந்துவிடாவிட்டால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

## உங்களுக்கு வேண்டுமா ஞாயிறு வாசகங்கள்?

ஞாயிறு, கடன் திருநாள்களுக்குரிய வாசகங்கள் அச்சிடப்பட்டுத் துண்டுப்பிரசுரங்களாக எம்மால் விநியோகிக்கப்படுகின்றன. உங்கள் பங்குத்தந்தை மூலமோ, நேரடியாகவோ எம்முடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுங்கள். தபாற் சீர்கேடுகளை முன்னிட்டு மூன்று வாரங்களுக்கு முன்னமே அவை தபாலிற் சேர்க்கப்படுகின்றன. நீங்கள் அவற்றைக் குறித்த நாளுக்குமுன் பெற்றுக் கொள்வது உறுதி.

பிரதி-/25 சதம் மட்டுமே. தபாற் செலவு இல்லை.

ஆ - ர்.

## கீழ்ப்படியாமையே எல்லாப் பாவங்களுக்கும் மாதிரி

''ஆதி ஆகமத்தில் விபரிக்கப்பட்டுள்ள முதற்பெற்ருேரின் கீழ்ப்படியாமை என்னும் பாவமே மனிதன் கட்டிக்கொள்ளக் கூடிய எல்லாப் பாவங்களுக்கும் ஒரு மாதிரியாகக் கருதப்படக் கூடியதாக இருக்கின்றது''. என்று பாப்பரசர் இரண்டாம் அருள் சின்னப்பர் சென்ற மாதம் 10ஆம் திகதி தனது வழமையான புதன்கிழமைப் பகிரங்கத் தரிசனச் செய்தியின் போது குறிப்பிட்டார். வேதாகம முதற் புத்தகத்தின் எழுத்துருவமைப்பை ஏற்றுக் கொண்டு பேசிய பாப்பரசர் அந்த நிகழ்ச்சி மனித வரலாற்றின் ஆரம்பகாலத்தில் நடைபெற்ற உண்மைச்சம்பவத்தைச் சித்திரிக்கின்றது என்ருர்.

''இந்த முதற் பாவம், முதல் மனிதரையும் அவர்கள் கடவுளோடு கொண்டிருந்த உறவையும் பாதித்ததோடு நின்றுவிடாது எல்லா மக்களினமும் ஆதியிலே பெற்றிருந்த அருள் வாழ்வையும் இழக்கச் செய்துள்ளது'' என்ருர்.

''விலக்கப்பட்ட கனியானது மனிதனுக்குக் கட்டளைகளைக் கொடுத்தது இறைவனே என்பதைக் காட்டுகிறது.. எனவே எந்த ஒரு மனிதனும் தனக்குத் தானே நல்லது எது, தீயது எது எனத் தீர்மானிக்க முடியும் என்று கொள்வது தவறுனது என்பதை உணர்ந்து இறைவனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்றும் கூறினுர்.

இந்திய திரைப்படங்களில்

## கிறிஸ்தவர்களை இழிவுபடுத்துகின்ற அநீதியான நடைமுறை

''இந்திய திரைப்படங்களில் தீயவர்களுடைய பாத்திரங்களில் சிலுவையை அணிந்து நிற்கும் கிறிஸ்தவர்களைச் சித்தரிப்பதினுல் கிறிஸ்தவர்களைத் தீயவர்களாகக் காட்டுகின்ற தன்மையைப்பற்றிப் பலமுறை சுட்டிக்காட்டிய போதிலும் இந்திய திரைப்படத் தயாரிப்பாளர்களும் இயக்குனர்களும் இதனைத்தொடர்ந்து கடைப்பிடிக்கின்றனர். இது உலகிலுள்ள கிறிஸ்தவ சமூகங்கள் அனைத்துக்கும் புனிதமான அடையாளத்தை இகழ்வதோடு இந்தியாவிலுள்ள கிறிஸ்தவர்களை இழிவுபடுத்தும் ஒரு செயலுமாகும். எனவே, இந்த அநீதியான, இகழ்ச்சிக்குரிய செயலை நிறுத்தும்படி திரைப்படத் தயாரிப்பாளர்களையும் இயக்குனர்களையும் திண்ணமாகக் கேட்டுக்கொள்கிருேம்'' என்று பொதுநிலையினரின் முக்கிய சங்கங்களில் ஒன்ருன அகில இந்திய கத்தோலிக்க ஐக்கியம் தனது 86ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக்கூட்டத்தில் தீர்மானமெடுத்து, பம்பாயிலுள்ள இந்தியத்திரைப்படச் சங்கத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. ''அகிம்சை முறையில் நம்பிக்கை கொண்டுள்ளதோடு அதையே கையாண்டுள்ள சிறுபான்மைச் சமூகமாகிய கிறிஸ்தவ சமூகம் பேச்சுவார்த்தை மூலம் தனது பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியும் என நம்பிக்கை கொண்டுள்ளது'' என்றும் அதில் குறிப்பிட்டுள்ளது.

## எழுதுங்கள்

பாதுகாவலனில் பிரசுரிக்க ஆக்கங்கள் உங்களிடமிருந்தே எதிர்பார்க்கப்படுகின்றன. பொருத்தமாக எழுதி அனுப்புங்கள் அல்லது நேரில் கொண்டு வந்து தாருங்கள்: உரிமை கோரப்படாத ஆக்கங்கள் பிரசுரத்துக்குத் தகுதி அற்றவை. ஆ–ர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



சூசைப்பிள்ளை
இம்மனுவேல்பிள்ளை

| | |
|---|---|
| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
| 1942-12-26 | 1985-11-09 |

இறைவா! உம்முடன் ஒன்றித்திருக்க தேவரீர் நேசமுடன் அழைத்துக் கொண்ட உமது அடியான் சூசைப்பிள்ளை இம்மனுவேலின் ஆத்துமத்தை இரட்சித்து நித்திய இன்பத்தை அளித்தருளும்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 10-11-86 திங்கள் காலை 7-00 மணிக்கு உமநகரி புனித நீற்றம்மாள் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும் அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

A/167

## எங்கும் நிறைந்த எழிலரிசி

விண்ணகமும் மண்ணகமும்
வியந்து புகழ்ந்து தொழும்
பெண்ணின் திருவிளக்கே
பேரன்புப் பெட்டகமே

நீளப் பெருங்கடலாய்
நீள்விசும்பின் நிறையெழிலாய்க்
கோலஉடை போர்த்துக்
கொள்ளை கொள்வாய் உள்ளத்தை

தங்கத் துகள்சொரிந்து
தகதகக்கும் செங்கதிரில்
அங்கம் பளபளக்கும்
அம்புயத்தின் செம்பதத்தில்

பிஞ்சு நிலவொளிரும்
பிறை தவழும் கண்குளிர
நெஞ்சம் புளகமிடும்
நினைவினிக்கும் நின்வடிவம்

எத்திசையும் நர்த்தனமாய்
இலங்கும் இதயத்தின்
பத்தியெனும் தொலைநோக்குப்
படிமத்தாற் காண்கின்றேன்

## திருவழிபாட்டு நாட்காட்டி

1987ஆம் ஆண்டுக்கான, திருவழிபாட்டு நாட்காட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பிரதி ஒன்றின்விலை ரூபா 12/=

★ கோவில்கள், தாபனங்கள் தொடர்பான விபரங்கள் வெளியிடவிரும்புவோர் 20-11-1986 க்கு முன் விளம்பரம் ஒன்றுக்கு ரூபா 10 வீதம் செலுத்தியனுப்புக.

★ நாட்காட்டி தேவைப்படுவோர் தொகையைக் குறிப்பிட்டு 20-11-1986 க்கு முன் அறியத்தரவேண்டும்.

## புனிதர்களின் சமூக உறவு

கார்த்திகை மாதம் இறந்த ஆத்துமாக்களின் மாதம். இம்மாதம் முதல் திகதி, சகல புனிதர்களின் தினமாகக் கொண்டாடப்படுகிறது. இறந்தவர்களில் கடவுளின் ஆசீருக்குத் தகுதியுடையவர்கள் அனைவரும் புனிதர்கள். அவர்கள் மட்டுமா? நீங்களும் நானும் புனிதர்களே.

அருள் நிலையிற் படைக்கப்பட்ட மனிதன் கீழ்ப்படியாமையால் பாவம் செய்ததால் அருள்வாழ்வை இழந்தான். ஆனால், கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பினால் நாம் அருள் வாழ்வை மீண்டும் பெற்றுக்கொண்டோம். ஞானஸ்நானத்தினால் நாம் புனிதர்களின் சமூக உறவிற் பங்காளிகள் ஆகியுள்ளோம். புனிதர்களின் சமூக உறவிற் பங்குகொள்ளும் நாம் நமது கனமான பாவங்களால் அருள்வாழ்வை இழந்து புனிதர்களின் சமூக உறவில் அங்கத்துவத்தையும் இழந்துவிட முடியும்.

புனிதர்களின் சமூக உறவில் துன்புறும்சபை, போர்புரியும் சபை, இன்புறும்சபை என மூன்று பிரிவினர் உள்ளனர்.

துன்புறும் சபையில், தம்வாழ்விற் செய்த பாவங்களுக்குத் தக்க பிராயச்சித்தம் செய்யாது இறந்தவர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் தம் சொந்த முயற்சியால் தம் மீட்புக்கு எதுவும் செய்ய முடியாது. எனவே, நம் உதவிகளை இவர்கள் நாடி நிற்கின்றார்கள். ஆனால், இவர்கள் புனிதர்களின் சமூக உறவிற் கொண்டிருக்கும் உறவின் காரணமாக எமக்காக மன்றாட முடியும்.

போர் புரியும் சபையில் உயிருடன் வாழும் அனைத்து விசுவாசிகளும் அடங்குவர். அன்றாட வாழ்வில் நன்மைக்கும் தீமைக்கும் மத்தியிலே வாழ்ந்து மனச்சாட்சிக்கு அச்சம் விளைவிக்கும் பாவங்களை நீக்கிக் கடவுளுக்குகந்தவற்றையே செய்வதற்காகத் தீமைக்கு எதிராகப் போர்புரியும் நாம் ஒவ்வொருவரும் இச்சபையில் உள்ளோம்.

இன்புறும் சபையில், விசுவாச வாழ்வில் உறுதியாக நிலைத்திருந்து, பரிசு பெறும் இலக்கை நோக்கி ஓடி வெற்றி பெற்ற அனைத்துக் கிறிஸ்தவர்களும் இருக்கின்றார்கள்.

புனிதர்கள் நமக்காகவும், துன்புறும் சபையில் உள்ள இறந்த ஆன்மாக்களுக்காகவும் நன்மை புரியும் ஆற்றலுடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களை நாம் மன்றாடும் போது எமக்காகவும், துன்புறும் நம் சகோதரருக்காகவும் இறைவனிடம் பரிந்து பேசுகின்றார்கள்.

நாம் நமது வாழ்விலே நமக்காகவும், இறந்தோர்க்காகவும் நற்செயல் புரிய முடியும். பாவங்களை விலக்கி, நாம் கடவுளுக்குகந்த செயல்களில் ஈடுபடும்போது அருள்வாழ்வில் நிலைத்திருக்கிறோம். அது மட்டுமன்றி நம் புண்ணியச் செயல்களால் இறந்தோரை மீட்கும் பணியிலும் நாம் பங்கு கொள்ள முடியும். எனவே தான் இம்மாதம் நாம் விசேட முறையில் அவர்களுக்காக மன்றாடுகிறோம்.

நாம் நம் அருள் வாழ்வை இழந்தோமென்றால் நமக்கு நாமே ஆக்கினைத் தீர்ப்பைத் தேடிக் கொண்டவர்களாவோம். வேறு எவராலும் எம்மைக் காப்பாற்ற முடியாது. இறந்த ஆன்மாக்களை நினைவுகூரும் நாம், நமது மறுவாழ்வையும் நினைவு கூர்ந்து அதற்கேற்ப வாழ்வோம்.




## இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவு (2-11-86)

**ஞான ஆகமம் 4:7 - 15.**

நீதிமான்கள் நீண்டகாலம் வாழ்வார்கள் என்றும் பாவிகள் இளமையிலே இறந்து விடுவார்கள் என்றும் அக்காலத்தில் பொதுவாகக் கருதப்பட்டது. இதற்கு மாறான கருத்து இந்த வாசகத்தில் காணப்படுகிறது. அதாவது ஒருவன் இளமையில் இறந்தாலும் அவன் நீதிமானாக இருக்கக் கூடும் என்றும், அவன் குறுகிய காலத்தில் நிறைவுபெற்றதால், தீமையின் நடுவிலிருந்து இறைவன் அவனை உடனடியாக எடுத்துக் கொள்கிறார் என்றும் இங்கு எடுத்துக்காட்டப்படுகிறது. மேலும், ஆண்டுகளின் எண்ணிக்கையன்று, ஆனால், மாசற்ற வாழ்வே பழுத்த முதுமைப் பருவமாகி, ஒருவனை மதிப்புக்குரியவனாக்குகிறது என்றும் இங்கு வலியுறுத்தப்படுகிறது.

**உரோமையர் 8:14 - 23**

கடவுளின் ஆவியே கிறிஸ்தவர்களைக் கடவுளின் பிள்ளைகளாக மாற்றுகிறார் என்றும், அவர்களை இறைமாட்சிமைக்கு உரிமையாளராகுகிறார் என்றும் இங்கு புனித சின்னப்பர் முதலில் விளக்குகிறார். கிறிஸ்து ஒருவரே இறைவனின் இயல்பான மகன். ஞானஸ்நானத்தில் அவருடைய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட நாம் அவரோடு ஒன்றிக்கப்பட்டு இறைவனின் மக்களாகிறோம். எனவே, இனி அச்சத்திற்கோ அடிமையின் மனநிலைக்கோ இடமில்லை, கிறிஸ்துவைப்போல் நாமும் இறைவனை "அப்பா, தந்தாய்" என்று கூப்பிட முடியும் அவரோடு நாமும் இறைவனின் செல்வத்திற்கு உடன் உரிமையாளராய் இருக்கிறோம். இவ்வாறு உண்மையாகவே நாம் இறைமக்கள்தான் என்று புனித சின்னப்பர் எடுத்துக் காட்டுகிறார். அடுத்து நாம் கிறிஸ்துவோடு இறைமாட்சியில் பங்குபெறுவதற்கு அவருடைய பாடுகளிலும் பங்குபெற வேண்டும் என்று புனித சின்னப்பர் கூறுகிறார். ஞானஸ்நானத்தில் நாம் கிறிஸ்துவின் இறப்பு - உயிர்ப்பில் பங்கு கொண்டோம். ஆனால், நாம் நம் ஊனியல்புக்கு முற்றிலும் இறந்து இறைவாழ்வில் முழுமையாகப் பங்குகொள்ளும் வரை நம் ஊனியல்புக்கு இறந்து கொண்டே இருக்க வேண்டும். அதாவது தவமுயற்சிகளால நம் ஊனியல்புக்குரிய இச்சைகளை, தீய நாட்டங்களை நாம் சாகடிக்க வேண்டும். இங்குதான் துன்பம் பிறக்கிறது. ஆனால் இத்துன்பம் நம்மை இறைமாட்சிக்கு இட்டுச்செல்லும் வழியாதலால், அதை ஒரு பொருட்டாக நாம் கருதலாகாது என்று புனித சின்னப்பர் விளக்குகிறார். இறுதியாக நாம் இறைமாட்சியில் முழுமையாகப் பங்குகொள்ளும் நாளை நாமும் படைப்பு முழுவதுமே ஆவலோடு எதிர்நோக்கியிருப்பதாக அவர் எடுத்துரைக்கிறார். நமது மண்ணுலக வாழ்வின் முடிவுதான் நமது விண்ணக மாட்சியின் தொடக்கமாயிருப்பதால் "நம் உடல் விடுதலையாக்கப்படும் நாளை எதிர்நோக்கித் தவித்துக் கொண்டிருக்கிறோம்" என்று அவர் கூறுகிறார்.

**மத்தேயு 25:1 - 13**

இங்கு பத்துக்கன்னியர் உவமை வழியாக யேசு இரு முக்கிய உண்மைகளைப் படிப்பிக்கின்றார். அதாவது, மணமகன் கிறிஸ்துவோடு மணவீட்டுக்கு ஒப்பான வான்வீட்டில் நுழைவதற்கு நாம் எப்போதும் ஆயத்தமாய் இருக்க வேண்டும் என்றும், இறையருளை நாம் மற்றவர்களிடமிருந்து இரவலாக வாங்கிக்கொள்ள முடியாதென்றும் அவர் வலியுறுத்துகிறார்.



**நவமபர் 1**

**சகல புனிதர்களின் திருவிழா**

9ஆம் நூற்றாண்டு முதல் திருச்சபை முழுவதிலும் இந்த விழா கொண்டாடப்படுகிறது. "இன்று வான் வீட்டிலுள்ள சகல புனிதர்களின் திருவிழாவைக் கொண்டாடுகிறோம். அவர்கள் ஒருங்கே கூடியிருப்பதை நினைத்து விண்ணகம் ஆர்ப்பரிக்கின்றது. அவர்களின் பாதுகாவலை நினைத்து மண்ணகம் மகிழ்கின்றது. இவ்வுலகில் அவர்கள் இறைவனைக் குறித்து அடைந்த துன்பங்கள் வேதனைகள் எல்லாவற்றிற்கும் ஈடிணையற்ற மகிமை கொடுக்கப்பட்டுள்ளது."

**நவம்பர் 2**

**சகல ஆத்துமாக்களின் திருவிழா**

இன்று உத்தரிக்கும் தலத்திலுள்ள ஆத்துமாக்களின் வேதனையைக் குறைக்க நமது செபதபத்தின் மூலம் அவர்களுக்கு உதவிபுரியும் படி திருச்சபை நமக்கு அழைப்பு விடுக்கின்றது. நாம் இவ்வுலகில் நமது செபதபத்தால் இறைவனிடம் பல நன்மைகளை அடையலாம். உத்தரிக்கும் ஆத்துமாக்களோ அவ்விடத்திலிருக்கும் வரை தமக்கென ஒரு நன்மையும் பெறமுடியாது. நாமோ அவர்களுக்கு உதவி புரியமுடியும். எனவேதான் திருச்சபை சகல புனிதர்களின் விழாவிற்கு அடுத்தநாளை சகல ஆத்துமாக்களின் திருவிழாவாக பிரகடனப்படுத்தி நாம் அவர்களுக்காகச் செபிக்கும்படி அழைப்பு விடுக்கிறது.

**நவம்பர் 4.**

**புனித சாள்ஸ் பொரோமியோ —ஆயர்**

இத்தாலியில் 1538-ல் பிறந்து றோமன் சட்டமும் திருச்சபை சட்டமும் படித்து பட்டதாரி ஆனார். 4ஆம் பத்திநாதரால் கர்தினல்மார்களுள் ஒருவராகவும், மிலான் நகர ஆயராகவும் தேர்ந்து கொள்ளப்பட்டார். மந்தைக்கு உண்மையான ஆயராக, தம் மறைமாவட்டக் குருமார் சபையைப் பன்முறை கூட்டி நடத்தினார். மக்களின் மீட்பு, மேய்ப்பு சார்ந்த பலசட்ட திட்டங்கள் இயற்றினார். கிறிஸ்தவ வாழ்க்கை நடைமுறைகளை முழுமையாக ஊக்கி வளர்த்தார். 1584-ம் ஆண்டு நவம்பர் 3-ம் நாள் புனிதர் இறந்தார். இவருக்கு 1610-ம் ஆண்டு புனிதர் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

**6ஆம் ஆண்டு நினைவு**



முன்னாள் பாதுகாவலன்
ஆசிரியர்
S. M. J. Louis

| பிறப்பு | மறைவு |
|---|---|
| 20-8-1903 | 2-11-1980 |

இரவும் பகலும் என்றுமே
அன்பிலும் செபத்திலும்
எம்முடனே
இணைந்து எங்கள் சார்பினிலே
இறைவன் அடியில் வேண்டு
கின்றார்.

மதுரமான யேசுவே எங்கள் அன்பார்ந்தவரை உமது திரு அணைப்பில் வைத்திடும்.

துயருறும் மனைவி, மக்கள், மருமகன், பேரப்பிள்ளை, சகோதரர், உறவினர்.
5, அச்சுக்கூட வீதி,
யாழ்ப்பாணம்.

## அன்னை திரேசா...

1ஆம் பக்கத்தொடர்ச்சி

அணுஆயுதப் போர் உலகை அழிக்கும் இக்கட்டான நிலைக்கு அச்சுறுத்தி வருகிறது. இந்த நிலையில் அரசபதவி இழிநிலை எய்தியிருக்கிறது.

எனவே மக்கள் உய்யும் வழி உண்டானல் அது தவத்தின் உயர்வுக்கு எடுத்துகாட்டான அன்னை திரேசா போன்றவர்களின் ஆற்றலென்பதை இந்த அற்புதம் நினைவூட்டுகிறது.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சமாதானத்தை ஆசிப்பதுடன் அதற்காக உழையுங்கள்!